*22*

# பன்னிருவருக்குப் போதித்தல்

## (10:24-42)

*அடுத்ததாக இயேசு, தமது அப்போஸ்தலர்களுக்கு அறிவுறுத்தி, அப்போது அவர்களுக்கு முன்னுரைத்திருந்த உபத்திரவம் பற்றிப் பயப்படாது இருக்க அவர்களுக்குக் காரணங்கள் கொடுத்தார். அப்போஸ்தலர்களுக்கு இயேசுவின் அறிவுறுத்துதல் தரப்படுகையில், 10:24ல் ஒரு மாற்றம் கவனிக்கப்படுகிறது. இவ்விடத்தில் இருந்து முன்னோக்கிச் செல்லுகையில் இயேசு ("நீங்கள்" என்ற) முன்னிலைப் பெயர்ச்சொல்லுடன் கூடுதலாக, ("சீஷன்," "ஒவ்வொருவரும்" மற்றும் "யாரேனும்" போன்ற) படர்க்கைப் பெயர்ச்சொல்லைப் பயன்படுத்தினார். இந்த இலக்கண மாற்றமானது, பின்தொடர்ந்து வரும் அறிவுறுத்தல்களில் அதிகமானவை அவரது சீஷர் ஒவ்வொருவருக்கும் அர்த்தப்பட்டதாக இருந்திருக்க வேண்டும்.*

### *சீஷன் தன் போதகனிலும் மேற்பட்டவனல்ல (10:24, 25)*

***24சீஷன் தன் போதகனிலும், வேலைக்காரன் தன் எஜமானிலும் மேற்பட்டவனல்ல.***

***25சீஷன் தன் போதகனைப்போலவும், வேலைக்காரன் தன் எஜமானைப் போலவும் இருப்பது போதும். வீட்டெஜமானையே பெயல் செபூல் என்று சொன்னார்களானால், அவன் வீட்டாரை அப்படிச் சொல்வது அதிக நிச்சயமல்லவா?***

***வசனம் 24.*** *அப்போஸ்தலர்கள் எதிர்கொள்ள இருந்த வெறுப்புணர்வுகள் பற்றி இயேசு அவர்களை எச்சரித்த பின்பு, அவர்களிடத்தில் அவர், இதனால், விசேஷமாக தாமே பெற்றிருந்த நடத்துதலின் கண்ணோக்கில், அவர்கள் திகைப்படையக் கூடாது என்று கூறினார்.* ***சீஷன் தன் போதகனிலும், வேலைக்காரன் தன் எஜமானிலும் மேற்பட்டவனல்ல*** *என்பதைப் பொதுவான அறிவு ஒப்புக்கொள்கிறது. ஒரு சீஷர் தனது போதகரைப் பின்பற்றி அவரிடத்தில் இருந்து கற்றுக்கொள்கிறார். இந்தப் பழமொழியின் முதல் வரியை, லூக்கா மாறுபட்ட சந்தர்ப்பப் பொருளில் பதிவு செய்து பின்பு "[சீஷன்] தன் குருவுக்கு மேற்பட்டவனல்ல, தேறினவன் எவனும் [தன்] குருவைப்போலிருப்பான்" என்று கூடுதலாகக் கூறினார் (லூக்கா 6:40). இயேசு மாத்திரமே அவர்களின் போதகராயிருந்தார் என்று அவர்களுக்கு அவர் வலியுறுத்தினார் (23:8). அவர் உபத்திரவப்பட்டிருந்ததால் அவர்களும் உபத்திரவப்படுவதை எதிர்பார்க்க வேண்டும் (காண்க 1 பேதுரு 2:21; 4:1).*

பிற்பாடு யோவான் 13:16ல் இயேசு அவர்களுக்கு, "மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், ஊழியக்காரன் தன் எஜமானிலும் பெரியவனல்ல. அனுப்பப்பட்டவன் தன்னை அனுப்பினவரிலும் பெரியவனல்ல" என்று கூறினார். அவ்வசனப் பகுதியில், "அனுப்பப்பட்டவன்" என்பது "அப்போஸ்தலர்" என்றும் மொழிபெயர்க்கப்பட முடியும். யோவான் 15:20ல் அடிமையைப் பற்றி இயேசு இந்தக் கூற்றை மறுபடியும் கூறி, "அவர்கள் என்னைத் துன்பப்படுத்தினதுண்டானால், உங்களையும் துன்பப்படுத்துவார்கள்; அவர்கள் என் வசனத்தைக் கைக்கொண்டதுண்டானால், உங்கள் வசனத்தையும் கைக்கொள்ளுவார்கள்" என்று கூடுதலாகக் கூறினார். இதன் தொடர்புடைய கூற்று ஒன்று ரபீத்துவப் பாரம்பரியத்தில் காணப்படுகிறது: "ஒரு அடிமை தனது எஜமானரைப் போலிருத்தல் அந்த அடிமைக்குப் போதுமானதாக உள்ளது."[1]

**வசனம் 25.** இவ்விருவரும் தங்கள் தொடர்பின் காரணமாகப் பிறரால் ஒன்றுபோல் நடத்தப்படும்போது, **சீஷன் தன் போதகனைப்போலவும்,** வேலைக்காரன் தன் **எஜமானைப்போலவும் இருப்பது** போதும். கிறிஸ்துவும் அவரது சீஷர்களும் ஒரேவகையில் நடத்தப்பட்டதால், இது அவர்கள் விஷயத்தில் உண்மையாக இருந்தது.

இயேசு தம்மைப் பற்றி **வீட்டெஜமான்,** என்றும் தம்மைப் பின்பற்றுபவர்களைப் பற்றி **வீட்டார்** என்றும் குறிப்பிட்டார். இந்த மொழிநடை, எஜமான் மற்றும் அவரது அடிமைகள் என்ற முந்திய உருவகத்திற்கு இணையாக உள்ளது. ஒரு எஜமானர் "வீட்டின் தலைவராக" இருந்தார், மற்றும் அவரது அடிமைகள், "அவரது வீட்டாரில் உறுப்பினர்களாக" எண்ணப்பட்டனர். இங்கு அவர், தமது சீஷர்கள் தம்மைக் காட்டிலும் அதிகமாக இகழ்ந்து வெறுக்கப்படுவார்கள் என்பதை வலியுறுத்துவதற்கு, **அதிக நிச்சயமல்லவா** என்ற விவாதத்தைப் பயன்படுத்தினார். அவரை விமர்சித்தவர்கள் அவரைப் பழிதூற்றி இருந்தனர், அவரை **பெயல்செபூல்** அதாவது "பிசாசுகளின் தலைவன்" என்று அழைத்தனர். கிறிஸ்து தொடர்பாக இந்த வார்த்தையைப் பயன்படுத்துதல், அவர்மீது அவர்களின் வெறுப்பையும் முற்றிலுமான மரியாதைக் குறைவையும் காண்பித்தது. எஜமானரை அவர்கள், சாத்தானுடன் அவர் இணைவு கொண்டிருப்பதாக அர்த்தப்படுத்தும் இந்தப் பெயர்கொண்டு அழைத்தார்கள் என்றால் (மாற்கு 3:22, 23), அவரைப் பின்பற்றுபவர்களை அவர்கள் எவ்விதமாக நடத்துவார்கள்? டக்ளஸ் R. A. ஹர் அவர்கள், "இவ்வசனத்தில் பெயச்செபூலுக்கான குறிப்பு இதை 9:34 உடன் பிணைக்கிறது மற்றும் இது இயேசுவின் வல்லமையான செயல்களுக்கும் எதிர்மறைப் பதிலுரையாக இருந்து, இந்த ஆய்வுக்கருத்து மிகவும் முழுமையாக விவரித்து ஆராயப்படும் 12:22-32 வசனப்பகுதியை முன்னெதிர் நோக்குகிறது" என்று விளக்கம் அளித்தார்.[2]

"பெயல்செபூல்" என்ற பெயரின் உண்மையான அர்த்தம்பற்றி விவாதிக்கப் பட்டுள்ளது.[3] சிலர், இந்தச் சொற்றொடர் "(வானத்தில்) வாசம் பண்ணுபவர்களின் கர்த்தர்/எஜமானர்" என்று அர்த்தப்படுவதாக முடிவு செய்துள்ளனர். இது உண்மையாக இருந்தால், "வீட்டு எஜமான்" (*oikodespotēs*) என்ற இயேசுவின் குறிப்பானது வார்த்தைகளில் ஒரு விளையாட்டாக இருக்கலாம். மற்றவர்கள், இந்தப் பெயர் "சாணியின் கர்த்தன்" என்று அர்த்தப்படுத்துவதாகக் கூறுகின்றனர். இதனுடன் தொடர்புடைய "பெயல்

*செபூப்" என்ற வார்த்தை "ஈக்களின் தலைவன்" என்று அர்த்தப்படுகிறது. இது தோற்றகாலத்தில் பழைய கானானியர்களின் ஒரு தெய்வத்தினுடைய பெயராக இருந்தது (2 இராஜாக்கள் 1:2, 3, 6, 16). இப்பெயர்களின் அர்த்தம் எதுவாக இருந்தாலும், இயேசுவைச்* ***சாத்தான்*** *என்று குறிப்பிடுதலே, யூதத்தலைவர்களின் அவமானத்தினுடைய தாக்குமுனையாக இருந்தது.*

## *பயப்படாதிருங்கள் (10:26-31)*

***26அவர்களுக்குப் பயப்படாதிருங்கள்; வெளியாக்கப்படாத மறைபொருளும் இல்லை; அறியப்படாத இரகசியமும் இல்லை.***
***27நான் உங்களுக்கு இருளிலே சொல்லுகிறதை நீங்கள் வெளிச்சத்திலே சொல்லுங்கள்; காதிலே கேட்கிறதை நீங்கள் வீடுகளின்மேல் பிரசித்தம்பண்ணுங்கள்.***
***28ஆத்துமாவைக் கொல்ல வல்லவர்களாயிராமல், சரீரத்தை மாத்திரம் கொல்லுகிறவர்ளுக்கு நீங்கள் பயப்படவேண்டாம்; ஆத்துமாவையும் சரீரத்தையும் நரகத்திலே அழிக்க வல்லவருக்கே பயப்படுங்கள்.***
***29ஒரு காசுக்கு இரண்டு அடைக்கலான் குருவிகளை விற்கிறார்கள் அல்லவா? ஆயினும் உங்கள் பிதாவின் சித்தமில்லாமல், அவைகளில் ஒன்றாகிலும் தரையிலே விழாது.***
***30உங்கள் தலையிலுள்ள மயிரெல்லாம் எண்ணப்பட்டிருக்கிறது.***
***31ஆதலால், பயப்படாதிருங்கள்; அநேகம் அடைக்கலான் குருவிகளைப்பார்க்கிலும் நீங்கள் விசேஷித்தவர்களாயிருக்கிறீர்கள்.***

*அப்போஸ்தலர்கள் தங்களைத் துன்புறுத்துபவர்களுக்குப் பயப்படக்கூடாது என்பது ஏன் என்பதற்கு இயேசு, ஆறுதல் அளிக்கும் காரணங்களைக் கொடுத்தார். "பயப்படாதிருங்கள்" என்ற கட்டளை இப்பத்தியில் மூன்று முறைகள் காணப்படுகிறது (10:26, 28, 31).*

***வசனங்கள் 26, 27.*** *அப்போஸ்தலர்களுக்கு ஏற்படும் உபத்திரவத்தினால் நன்மையான சில விஷயங்கள் வரும் என்பதால், அவர்கள்* ***பயப்படாதிருக்க வேண்டும்*** *என்று இயேசு அவர்களுக்குக் கூறினார் (காண்க நடபடிகள் 8:1-4; பிலிப்பியர் 1:12-14, 19, 20). அவர்கள் செய்வதற்கு ஒரு வேலை அவர்களுக்குத் தரப்பட்டிருந்தது: இராஜ்யத்தின் செய்தியைப் பிரசங்கித்தல், எந்த உபத்திவத்தை அவர்கள் எதிகொண்டாலும் அந்த ஊழியம் நிறைவேற்றப்படும். முன்பு* ***மறைவாக*** *அல்லது* ***மறைக்கப்பட்டு இருந்தது வெளிப்படுத்தப்படும்*** *(காண்க மாற்கு 4:22; லூக்கா 8:17; 12:2, 3).*

*இயேசு அவர்களுக்குத் தனிப்பட்ட முறையில் போதித்திருந்தவைகளை அவர்கள் விரைவில் வெளிப்படையாக அறிவிக்கக் கூடியவர்கள் ஆவார்கள்:* ***நான் உங்களுக்கு இருளிலே சொல்லுதிறதை நீங்கள் வெளிச்சத்திலே சொல்லுங்கள்; காதிலே கேட்கிறதை நீங்கள் வீடுகளின்மேல் பிரசித்தம்பண்ணுங்கள்.*** *அவரது உயிர்த்தெழுதல் மற்றும் பரத்துக்கேறுதல் ஆகியவற்றிற்குப் பின்பு, இந்த விஷயங்களை அவர்கள் நினைவுக்குக் கொண்டுவருவதற்கும், அவர்களை சகல சத்தியத்திற்குள் வழிநடத்துவதற்கும், பரிசுத்த ஆவியானவரை இயேசு அனுப்புவார் (யோவான் 14:26; 16:13, 14; நடபடிகள் 2:1-4). அந்த வேளையில்*

*அவர்கள் இயேசுவை "கர்த்தர் என்றும் கிறிஸ்து என்றும்" வெளிப்படையாக அறிவிப்பார்கள் (நடபடிகள் 2:36).*

*"வீடுகளின்மேல் பிரசித்தம்பண்ணுங்கள்" என்பது "வெளிப்படையாக அறிவியுங்கள்" என்று கூறுதலுக்கான உருவக நடையாக உள்ளது. அந்த நாட்களில் பரந்த பகுதிக்கு ஒரு செய்தியை அறிவிக்க ஒரு நபர் விரும்பினால், அவர் ஒரு உயர்ந்த குன்று அல்லது கூரையின் மேற்பகுதிக்கு ஏறிச்சென்று சுற்றிலும் உள்ளவர்கள் கேட்கக் கூடும்படிக்கு அதை உரத்த சத்தமிட்டுச் சொல்லுவார். எக்காளம் ஊதுபவர்கள் பண்டிகையின் பரிசுத்த நாட்கள் தொடங்குவதை அறிவிக்கத் தங்கள் கொம்புகளை ஊதுவதற்காக எவ்வாறு கூரையின்மீது ஏறுவார்கள் என்பதை தல்மூத் புத்தகம் கூறுகிறது.[4]*

***வசனம் 28.** இயேசுவைப் **பின்பற்றுபவர்கள்** தங்கள் எதிரிகளைக் குறித்துப் பயப்படாதிருக்க வேண்டியிருந்தனர், ஏனெனில் அந்த எதிரிகள் அவரது சீஷர்களுக்குத் துன்பம் இழைக்கக் கூடிய விஷயத்தில் மட்டுப்படுத்தப்பட்டிருந்தனர். அவர்கள் **சரீரத்தைக் கொல்ல முடியும்**, ஆனால் **ஆத்துமாவைக் கொல்ல முடியாதிருந்தனர்**. "ஆத்துமா" என்பதற்கான (psuchē) கிரேக்க வார்த்தை nepesh எபிரெய வார்த்தைக்கு இணையாக உள்ளது, மற்றும் இது, உயிர் மூச்சு, வாழ்வுக் கொள்கை, பூமிக்குரிய வாழ்க்கை (விருப்பங்கள் மற்றும் உணர்வுகளை உள்ளடக்கிய) உள்ளான மனித உயிர், நபர், மற்றும் (இந்த பூமிக்குரிய வாழ்வைக் கடந்து செல்லுகிற) ஆத்துமா போன்ற பல்வேறு அர்த்தங்களைக் கொண்டுள்ளது.[5] இந்த சந்தர்ப்பப் பொருளில், கடைசி அர்த்தம் காட்சியில் உள்ளது என்பது தெளிவு. உடல் கொல்லப்பட்ட முடியும் ஆனால் ஆத்துமா தொடர்ந்து வாழ்கிறது (காண்க 11:29; 16:26; மாற்கு 8:36, 37; லூக்கா 12:20; எபிரெயர் 6:19; 1 பேதுரு 1:9, 22; 2:11; 4:19; யாக்கோபு 1:21; 5:20). கிறிஸ்துவை உண்மையாகப் பின்பற்றுபவர்கள் துன்புற்று உடலை இழந்தாலும், அவர்கள் "நித்திய தண்டனையை" அல்லது "இரண்டாம் மரணத்தை" எதிர்கொள்வதில்லை (25:46; வெளிப்படுத்தின விசேஷம் 20:14). அவர்களின் எதிரிகள், மனிதரில் உள்ள காணப்படாத பொருள்சார்பற்ற பகுதியைத் துன்புறுத்த இயலாது.*

*மனிதர்களுக்குப் பயன்படுவதற்குப் பதிலாக, **ஆத்துமாவையும் சரீரத்தையும் நரகத்திலே அழிக்க வல்லவருக்கே பயப்படுங்கள்,** என்று இயேசு அவர்களுக்கு அறிவுறுத்தினார். இங்கு இரண்டு வகையான பயங்கள் நேரெதிராக ஒப்பிடப்படுகின்றன: மனிதர்களுக்குப் பயப்படுதல் என்பது சுயநலமான பயமாக உள்ளது, ஆனால் தேவனுக்குப் பயப்படுதல் என்பது முழுமையானதும் நன்மையானதுமான உள்ளது.[6] தேவன் "இரட்சிக்கவும் அழிக்கவும் வல்லவர்" என்ற காரணத்தினால் (யாக்கோபு 4:12) அவருக்கே பயப்பட வேண்டும்.*

*"அழித்தல்" என்பதற்கான (apollumi) கிரேக்க வார்த்தை நிர்மூலமாவதை மறைமுகமாக உணர்த்துவதில்லை. ஆத்துமாவும் உடலும் நரகத்தில் எறியப்படும்போது அவைகள் அழிவுக்குக் கொண்டுவரப்படுகின்றன. ("நரகம்" என்பதற்கு, 5:22ன் மீதான விளக்கங்களைக் காணவும்.)*

***வசனங்கள் 29-31. பிதாவாகிய தேவன்** தம்முடையவர்களைக் கவனிக்கிறார் மற்றும் பாதுகாக்கின்றார் என்ற காரணத்தினால், இயேசுவைப் பின்பற்றுபவர்கள் பயப்படக்கூடாது. **குருவிகள்** மிகச்சிறிய*

மதிப்புடையவையாக உள்ளன. முதல் நூற்றாண்டில் சிலவேளைகளில் இவைகள் உண்ணப்பட்டன, ஆனால் இவைகள் மிகவும் குறைந்த விலை கொண்டவைகளானதால், ஏழை மக்களால் மாத்திரம் இவை உண்ணப்பட்டன. **ஒரு காசுக்கு இரண்டு** அடைக்கலான் குருவிகளை வாங்க முடிந்தது. லூக்கா 12:6ல், இரண்டு காசுகளுக்கு ஐந்து குருவிகள் விற்கப்பட்டதாகக் கூறப்படுகிறது; ஐந்தாவது குருவி பேரம்பேசியதில் எறியப்பட்டதாகக் காணப்படுகிறது.[7] "காசு" என்பதற்கான (*assarion*) கிரேக்க வார்த்தை, இயேசுவின் காலத்தில் சுற்றுக்கு விடப்பட்டிருந்த சிறிய தாமிர நாணயத்தைக் குறிக்கிறது. இது ஒரு தினேரியத்தில் பதினாறில் ஒரு மடங்கு மதிப்புடையதாக இருந்தது.[8] இந்தப் பறவைகளின் மதிப்பு இவ்வளவு அற்பமானதாக இருந்தாலும், அவற்றில் ஒன்றுகூட தேவனால் அறியப்படாமல் **தரையில் விழவோ** அல்லது இறக்கவோ முடியாது.

இந்த இடத்தில் இயேசு, **உங்கள் தலையிலுள்ள மயிரெல்லாம் எண்ணப்பட்டிருக்கிறது** என்று கூறி இடைமறித்தார். டேவிட் மென்ட்டன் அவர்களின் கூற்றுப்படி, ஒரு நபரின் தலையில் சராசரியாக 100,000 முடிகள் இருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது.[9] இப்படிப்பட்ட ஒரு மதிப்பீடு எவ்வாறு அறியப்பட இயலும் என்று நாம் வியப்படையலாம்! நமது வாழ்வில் முக்கியமற்ற மற்றும் அற்பமான விஷயங்களைப் பற்றிக்கூடத் தேவன் அறிகிறார் என்று இயேசு மறைமுகமாக உணர்த்தினார். மற்ற சந்தர்ப்பப்பொருளில். தேவனுடைய பாதுகாப்பு "ஆனாலும் உங்கள் தலைமயிரில் ஒன்றாகிலும் அழியாது" என்ற வாக்குத்தத்தத்தில் விளக்கப்படுகிறது (லூக்கா 21:18; காண்க நடபடிகள் 27:34).

மனித குலத்தின் மீது, குறிப்பாக இயேசுவின் சீஷர்கள் மீது தேவனுடைய அக்கறையை வலியுறுத்த இயேசு, குறைவானதில் இருந்து பெரியதற்கு என்ற வாதத்தைப் பயன்படுத்தினார் (காண்க 6:26ன் மீதான விளக்கங்கள்). **ஆதலால், பயப்படாதிருங்கள்; அநேகம் அடைக்கலான் குருவிகளைப்பார்க்கிலும் நீங்கள் விசேஷித்தவர்களாயிருக்கிறீர்கள்** என்று கூறியதன் மூலம் அவர் இந்த வாதத்தை முடித்தார். தேவனுடைய மக்கள் எப்போதும் துன்புறுகின்றனர் (அல்லது மரிக்கின்றனர் என்பதை கூட) அவர் அறிகிறார், மற்றும் அவர்களைக் குறித்து அவர் அக்கறை காண்பிக்கிறார். எருசலேம் தல்மூத்தில் இது தொடர்பான கூற்று ஒன்று காணப்படுகிறது: "பரலோகம் [தேவன்] இன்றி, ஒரு பறவை அழிவதில்லை; மனித குலமும் அதற்கும் அதிகமானதே!"[10]

## என்னை அறிக்கை பண்ணுகிறவர் எவரோ (10:32, 33)

**[32]மனுஷர் முன்பாக என்னை அறிக்கை பண்ணுகிறவன் எவனோ, அவனை நானும் பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் முன்பாக அறிக்கைபண்ணுவேன்.**

**[33]மனுஷர் முன்பாக என்னை மறுதலிக்கிறவன் எவனோ அவனை நானும் பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் முன்பாக மறுதலிப்பேன்.**

**வசனம் 32.** இயேசு **மனுஷர் முன்பாக** [தம்மை] **அறிக்கை**

***பண்ணுகிறவர்களுக்கு*** *மாபெரும் ஆசீர்வாதத்தை வாக்களித்து, தம்மைப் பின்பற்றியவர்கள் பயப்படாதிருக்க வேண்டும் என்று தொடர்ந்து ஏவினார். "அறிக்கை பண்ணுதல்" என்பதற்கான* (homologeō) *கிரேக்க வார்த்தை, அறிவிக்க அல்லது ஒப்புக்கொள்ள என்று அர்த்தப்படுகிறது. இயேசுவைப் பற்றிய மிகச்சரியான அறிக்கை பண்ணுதல் இங்கு குறிப்பிடப்படவில்லை. மலைப்பிரசங்கத்தில் இயேசு, தம்மை "ஆண்டவர்" என்று அறிக்கை பண்ணும் சிலரைப் பற்றிப் பேசினார்; இருப்பினும் அவர்களின் செயல்கள், அவர்களுடைய விசுவாச அறிக்கைக்குச் சீர்பொருத்தமான இராததால் அவர்கள் புறக்கணிக்கப்படுவார்கள் (7:21-23). பிற்பாடு பேதுரு "நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து" என்று கூறியதன் மூலம் நல்ல அறிக்கை என்று அழைக்கப்பட்ட அறிக்கையைச் செய்தார் (16:16).*

*சீஷர்கள் யூத நீதிமன்றங்களுக்கு முன்பாகவும் புறஜாதி ஆளுநர்கள் மற்றும் அரசர்களுக்கு முன்பாகவும் கொண்டுவரப்படுவார்கள் (10:17, 18). இப்படிப்பட்ட எதிர்கொள்ளுதல்கள் கிறிஸ்துவை அறிக்கையிடுவதற்கான வாய்ப்புகளாக இருந்தன. சீஷர்கள் தங்கள் அறிக்கை பண்ணுதலைக் காத்துக் கொள்வதற்கு, உபத்திரவம் பற்றிய எந்த பயங்களையும் வெற்றிகொள்வார்கள். இயேசு தாமே, "பொந்தியுபிலாத்துவின் முன்னின்று நல்ல அறிக்கையைச் சாட்சியாக விளங்கப்பண்ணினார்" (1 தீமோத்தேயு 6:14; காண்க 27:11) - மற்றும் அது அவருக்குச் சிலுவை மரணத்தைக் கொண்டுவந்தது.*

*யோவான் சுவிசேஷத்தில், யூதர்களில் பலர், தங்களின் தலைவர்கள் "இயேசுவைக் கிறிஸ்து என்று எவனாவது அறிக்கை பண்ணினால் அவனை ஜெபஆலயத்துக்குப் புறம்பாக்க வேண்டுமென்று" முடிவு செய்திருந்ததால், தங்கள் விசுவாசத்தை அறிக்கையிட அஞ்சினர் (யோவான் 9:22). ஆளுநர்களில் சிலரும்கூட இயேசுவை விசுவாசித்தனர் ஆனால் "ஜெபஆலயத்துக்குப் புறம்பாக்கப்படுவோமோ" என்று அஞ்சியதால் அவரை அறிக்கைபண்ணாதிருந்தனர் (யோவான் 12:42).*

*ஒருவர் கிறிஸ்வதராவதற்கு முன்னர், கிறிஸ்துவில் கொண்டுள்ள விசுவாசத்தை அறிக்கையிடும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார் (ரோமர் 10:9, 10; 1 தீமோத்தேயு 6:12). இயேசு, "ஜீவனுள்ள தேவனுடைய குமாரனான கிறிஸ்துவாக" இருக்கிறார் என்பதே அந்த அறிக்கையாக உள்ளது (16:16; காண்க நடபடிகள் 8:37). இது அவரை ஒருவர் தமது ஆண்டவராகவும் எஜமானராகவும் இருப்பதாக அறிக்கை பண்ணுதலை மறைமுகமாக உணர்த்துகிறது. கிறிஸ்தவர் தமது விசுவாச அறிக்கைக்காகத் துன்புறுத்தப்படலாம் மற்றும் தமது ஜீவனையே கையளிக்க வேண்டியிருக்கலாம். இருந்தபோதிலும் - "தேவனுக்கும் மனிதருக்கும் இடையில் ஒரே மத்தியஸ்தரான" (1 தீமோத்தேயு 2:5;* NIV*) - இயேசு, அவனை ...* ***பரலோகத்திலிருக்கிற*** [தமது] ***பிதாவின் முன்பாக அறிக்கைபண்ணுவார்.*** *"பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் முன்பாக" என்பதற்குப் பதில் லூக்கா சுவிசேஷத்தில் "தேவதூதர் முன்பாக" என்றுள்ளது (லூக்கா 12:8, 9).*

***வசனம் 33.*** *எதிர்கருத்தை உரைப்பதில் இயேசு, தம்மிடமிருந்து திரும்பும் எந்த ஒரு சீஷனையும் பின்வருமாறு எச்சரித்தார்:* ***மனுஷர் முன்பாக என்னை மறுதலிக்கிறவன் எவனோ, அவனை நானும் பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் முன்பாக மறுதலிப்பேன்.*** *"மறுதலித்தல்"* (*arneomai*) *வினைச் சொல்,*

"உரிமையைத் துறத்தல்" அல்லது "மறுத்துரைத்தல்" என்று அர்த்தப்படுகிறது. முதலாவது இது, இயேசுவை ஆண்டவர் என்ற வகையில் அவரது உரிமைத்துவத்தைத் துறத்தலைக் குறிக்கிறது. இதே வகையில் இது பேதுருவின் மறுதலிப்புகளைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளது (26:70, 72, 74). இரண்டாவது இது, தனிநபர் ஒருவரைக் கிறிஸ்து தமது சீஷரல்ல என்று மறுதலித்தலைக் குறிக்கிறது (காண்க 7:23; 2 தீமோத்தேயு 2:12).

தொடக்ககாலக் கிறிஸ்தவர்கள், கிறிஸ்துவை மறுதலிக்குமாறு வலிவான கட்டாயத்தினுள் வைக்கப்பட்டனர். உதாரணமாக கி.பி. இரண்டாம் நூற்றாண்டின் முற்பகுதியில், பொந்தியு/பித்தினியா நாட்டின் தேசாதிபதியாக இருந்த இளைய பிளீனி என்பவர், கிறிஸ்துவைத் துறந்திருந்த கிறிஸ்தவர்களை, ரோமப் பேரரசர் ட்ரேஜன் கையாளும் விதத்தில் அவரது கொள்கை பற்றி எழுதினார். கிறிஸ்தவர்களாக இருத்தல் என்று குற்றம் சாட்டப்பட்டவர்களை அவர் இரண்டு மூன்று முறை விசாரித்து, அவர்கள் கிறிஸ்துவை மறுதலிக்க வாய்ப்புக்கொடுத்தார். மறுதலிக்காதவர்களுக்கு அவர் மரணதண்டனை கொடுத்தார். இருப்பினும் அவர்கள் ரோமக் குடிமக்களாக இருந்தால், அவர்களை அவர் ரோமாபுரிக்கு அனுப்பினார். கிறிஸ்தவர்களாக இருத்தலை மறுதலித்தவர்கள், கிறிஸ்துவை சபித்து, தேவர்களை ஆராதித்து, பேரரசரின் உருவச்சிலைக்கு முன்பாக தூபத்துடன் ஜெபத்தை ஏறெடுத்தபோது, அவர்கள் விடுவிக்கப்பட்டனர்.[11]

## "நான் சமாதானத்தைக் கொண்டுவரவில்லை" (10:34-36)

**34பூமியின்மேல் சமாதானத்தை அனுப்பவந்தேன் என்று எண்ணாதிருங்கள்; சமாதானத்தையல்ல, பட்டயத்தையே அனுப்பவந்தேன்.**
**35எப்படியெனில், மகனுக்கும் தகப்பனுக்கும், மகளுக்கும் தாய்க்கும், மருமகளுக்கும் மாமிக்கும் பிரிவினையுண்டாக்க வந்தேன்.**
**36ஒரு மனுஷனுக்குச் சத்துருக்கள் அவன் வீட்டாரே.**

**வசனம் 34.** சமாதானத்தைப் பற்றி இவ்விடத்தில் இயேசுவின் கூற்று, அவர் உலகத்திற்கு வந்த நோக்கத்திற்கு எதிராயிருப்பதாகத் தோன்றுகிறது. அவரை ஏசாயா, "சமாதானப் பிரபு" என்று அழைத்தார் மற்றும் அவரது சமாதானமான மற்றும் நீதியான ஆளுகையைப் பற்றியும் பேசினார் (ஏசாயா 9:6, 7). அவரது உறுதிப்பாட்டை நாம் எவ்வாறு விளக்கப்படுத்த வேண்டும்? இருதயங்களின் முரட்டாட்டத்தினுடைய விளைவாக **சமாதானம்** இன்மை ஏற்படுகிறது என்பதை நாம் கவனிக்க வேண்டும். இயேசு கூறியதும் செய்ததும், மக்களுக்கு இடையில் பிரிவினைக்கு வழிநடத்திற்று; அவருக்கு அவர்களின் பதில்செயல் மூலமாக இந்தப் பிரிவினை கொண்டுவரப்பட்டது. இயேசுவைப் புறக்கணிப்பவர்கள், இயேசுவை ஏற்றுக்கொள்பவர்களுடன் சமாதானமாக இருக்க முடியாது என்பது தெளிவு. **பட்டயம்** என்பதற்கான குறிப்பு, "முரண்பாடு" அல்லது "பிரிவினை" என்பதற்கு ஒப்புவமை என்ற வகையில் செயல்படுகிறது (லூக்கா 12:51). இயேசு சமாதானப் பிரபுவாக இருக்கிறார் (லூக்கா 2:14; எபேசியர் 2:14-18), ஆனால் அவரது சமாதானம் இந்த

*உலகத்தின்படியான சமாதானமாக இருப்பதில்லை (யோவான் 14:27; கலாத்தியர் 5:22).*

***வசனங்கள் 35, 36.*** இவ்வசனங்களில் இயேசு, மீகா 7:6ல் இருந்து மேற்கோள் காண்பித்தார். மக்களைப் பிரித்தல் என்பதல்ல ஆனால் அவர்களை ஒன்றுகூட்டுதல் என்பதே அவரது நோக்கமாக இருக்கையில், சுவிசேஷத்தை அறிவித்தல் என்பது அடிக்கடி பிரிவினையையே விளைவிக்கிறது. அவரது செய்தி குடும்பங்களைக்கூடப் பிரிக்கிறது, ஏனெனில் குடும்பத்தின் சில உறுப்பினர்கள் அந்த செய்தியை ஏற்றுக்கொள்கையில், மற்றவர்கள் அதைப் புறக்கணிக்கலாம். இது இயேசுவின் சொந்தக் குடும்பத்தைப் பொறுத்தவரையிலும்கூட உண்மையாக இருந்தது (மாற்கு 3:20, 21, 31-35; யோவான் 7:1-9). அவரது போதனைக்கு ஒருவர் விசுவாசநிறைவுடையவராக இருக்கையில் மற்றவர் அவ்வாறு இல்லாமற்போகும் போது, மிகநெருக்கமான உறவுகள்கூட முறிக்கப்படக்கூடும். ஒரு **தகப்பனும் தாயும்** தங்கள் பிள்ளைகளுக்கு எதிரானவர்கள் ஆகலாம், அல்லது பிள்ளைகள் தங்கள் விசுவாசத்துடன் பெற்றோர்களைப் புறக்கணிக்கலாம். கணவர்களும் மனைவிகளும் இந்த ஆவிக்குரிய போராட்டத்தில் எதிர் எதிர் அணிகளில் இருக்கக் கூடும். இப்படிப்பட்ட வேறுபாடுகள் எழும்போது, **ஒரே வீட்டார்** அடிக்கடி **எதிரிகள்** ஆகின்றனர் (10:21ன் மீதான விளக்கங்களைக் காணவும்).

## "எல்லாருக்கும் மேலாக என்னை நேசியுங்கள்" *(10:37-39)*

***37 தகப்பனையாவது தாயையாவது என்னிலும் அதிகமாய் நேசிக்கிறவன் எனக்குப் பாத்திரன் அல்ல; மகனையாவது மகளையாவது என்னிலும் அதிகமாய் நேசிக்கிறவன் எனக்குப் பாத்திரன் அல்ல.***

***38 தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றாதவன் எனக்குப் பாத்திரன் அல்ல.***

***39 தன் ஜீவனைக் காக்கிறவன் அதை இழந்து போவான்; என்னிமித்தம் தன் ஜீவனை இழந்து போகிறவன் அதைக் காப்பான்.***

***வசனம் 37.*** இயேசு தம்மைப் பின்பற்றுபவர்களுக்கு, அவர்கள் தங்கள் சொந்தக் குடும்பத்தினரை நேசிப்பதைக் காட்டிலும் அதிகமாகத் தம்மை நேசிக்கும்படி அறைகூவல் விடுத்தார். லூக்கா 14:26ல் அவர், ஒருவர் தமது சீஷராவதற்கு, "தன் தகப்பனையும் தாயையும் மனைவியையும் பிள்ளைகளையும் சகோதரரையும் சகோதரிகளையும், தன் ஜீவனையும் வெறுக்க வேண்டும்" என்று கூறினார். அவரது சீஷராக இருத்தல் என்பது, மனித மட்டத்தில் ஒருவர் தமது சொந்தக் குடும்பத்தை அதிகமாக நேசித்தாலும், அது அவருக்கும் அவரது கர்த்தருக்கும் இடையில் வரக்கூடாது என்று அர்த்தப்படுகிறது. மத்தேயு 10:37ம் வசனம் லூக்கா 14:26ன் அர்த்தத்தை விளக்கப்படுத்துகிறது. "வெறுக்க வேண்டும்" என்ற இயேசுவின் கட்டளை, "குறைவாக அன்புகூர வேண்டும்" என்று அர்த்தப்படுவது தெளிவு (காண்க ஆதியாகமம் 29:31; KJV). கிறிஸ்துவின் சீஷர்கள் எவரொருவரையும் வெறுக்க

வேண்டும் என்று அவர் விரும்புவது இல்லை, ஆனால் மற்றவர்களுடனான அவர்களின் கூட்டுறவு, அவருக்கு அவர்களின் ஒப்புக்கொடுத்தலுக்கு அடுத்ததாக இருக்க வேண்டும் என்றே அவர் விரும்புகிறார். இல்லையென்றால் அவர்கள் அவரது சீஷர்கள் என்று அழைக்கப்படத் தகுதியற்றவர்களாக இருப்பார்கள்.

**வசனம் 38.** இயேசு, **தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றாதவன் எனக்குப் பாத்திரன் அல்ல** என்று கூறியதன் மூலம் தமது அப்போஸ்தவர்களுக்கு மேலும் அறைகூவல் விடுத்தார். சுவிசேஷ விபரங்களில் இதுவே சிலுவையைப் பற்றிய முதல் குறிப்பிடுதலாக உள்ளது (காண்க 16:24; மாற்கு 8:34; லூக்கா 9:23). தண்டனை விதிக்கப்பட்ட குற்றவாளி சிலுவையில் அறையப்படும் இடம் வரையிலும், தனது சிலுவையைச் சுமந்து செல்ல வற்புறுத்தும் ரோமானிய நடைமுறையில் இருந்து இந்த உருவகம் தரவழைக்கப்பட்டுள்ளது.[12] சிலுவை என்பது, பாடு அனுபவித்தல், வெட்கக்கேடு மற்றும் கடைசியில் மரணம் ஆகியவற்றின் அடையாளமாக இருந்தது. இங்கு இது, கர்த்தருக்கு விசுவாசமாக இருத்தலுக்கு, இயேசுவின் சீஷர்கள் எந்த தியாகமும் செய்து, சுமக்க வேண்டிய சுமையைக் குறிக்கிறது. சிலுவையொன்றைச் சுமத்தல் என்பது, ஒருவர் தமது சொந்த உயிரை ஒப்புக் கொடுத்தலைக்கூடக் கேட்பதாக இருக்கலாம். ஒருவர் தமது சிலுவையைச் சுமத்தல் என்ற சிந்தனைக்கு, லூக்கா “அநுதினமும்” என்ற வார்த்தையைக் கூடுதலாகக் கூறினார், இது தொடர்ந்து நடைபெறும் செயலைச் சுட்டிக்காண்பிக்கிறது (லூக்கா 9:23). ஒருவர் தமது சிலுவையைச் சுமக்கத் தவறுதல் என்பது, கொல்கொதாவுக்குச் செல்லும் வழியில் சிலுவையைச் சுமந்து சென்றவரின் சீஷராக இருக்கத் தகுதி இல்லாதவராக்குகிறது (யோவான் 19:17).

**வசனம் 39.** மேலும் இயேசு, **தன் ஜீவனைக் காக்கிறவன் அதை இழந்துபோவான்; என்னிமித்தம் தன் ஜீவனை இழந்துபோகிறவன் அதைக் காப்பான்** என்றும் கூறினார் (காண்க 16:25; மாற்கு 8:35; லூக்கா 9:24; 17:33; யோவான் 12:25). ஒருவர் தமது ஜீவனைக் கண்டறிதல் என்பது, சுய பாதுகாப்பு மற்றும் சுய திருப்தி ஆகியவற்றைச் சார்ந்துள்ளது. ஒருவர் தமக்காக வாழ்கிறார் என்றால், அவர் நித்தியத்திற்கும் தேவனை விட்டுப் பிரிக்கப்படுவார், அதாவது, அவர் தமது ஜீவனை இழப்பார். இதற்கு நேர்மாறாக, ஒருவர் தமது சுயவிருப்பங்களுக்கு மரிக்கிறார் - வேதசாட்சியாகத் தமது உயிரையும் கொடுக்கிறார் - என்றால், அவர் என்றென்றைக்கும் தேவனுடன் வாழ்வார். பரலோகத்திற்குச் செல்வதற்காக எந்த தியாகத்தையும் செய்தல் என்பதே நாடவேண்டிய நிலைப்பாடாக உள்ளது. என்ன விலைகொடுத்தும் இயேசுவுக்கு விசுவாசம் நிறைந்தவராக நிலைத்திருப்பவர்கள், கடைசிவரை நிலைத்திருப்பவர்கள், நித்திய வாழ்வின் மகிமையைப் பெற்றுக்கொள்வார்கள்.[13] ஜேம்ஸ் பர்ட்டன் காஃப்மேன் அவர்கள் இந்தக் கருத்தைப் பின்வருமாறு கூறித் தொகுத்துரைத்தார்:

> எவ்வித முன்விருப்பமும் இன்றி, தேவனுடைய சித்தத்தை நாடுவதற்குத் தமது வாழ்வை அர்ப்பணிப்பவர்கள் ... இவ்வசனத்தின் கருத்தில் தமது ஜீவனை இழக்கின்றனர். ஒருவர் தமது சொந்த ஜீவனையும் மனவிருப்பத்தையும் கிறிஸ்துவுக்குள் மூழ்கச்செய்தல் என்பது, பவுலுடன்

*சேர்ந்து "இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்" என்று கூறுவதாக உள்ளது (கலாத்தியர் 2:20), இது ஒருவர் தமது ஜீவனை இழந்து அதைக் கண்டறிதலாகவும் உள்ளது.*[14]

## "உங்களை ஏற்றுக்கொள்ளுகிறவன் என்னை ஏற்றுக்கொள்ளுகிறான்" *(10:40-42)*

***[40]உங்களை ஏற்றுக்கொள்ளுகிறவன் என்னை ஏற்றுக்கொள்ளுகிறான்; என்னை ஏற்றுக்கொள்ளுகிறவன் என்னை அனுப்பினவரை ஏற்றுக்கொள்ளுகிறான்.***

***[41]தீர்க்கதரிசி என்னும் நாமத்தினிமித்தம் தீர்க்கதரிசியை ஏற்றுக்கொள்ளுகிறவன் தீர்க்கதரிசிக்கேற்ற பலனை அடைவான்; நீதிமான் என்னும் நாமத்தினிமித்தம் நீதிமானை ஏற்றுக்கொள்ளுகிறவன் நீதிமானுக்கேற்ற பலனை அடைவான்.***

***[42]சீஷன் என்னும் நாமத்தினிமித்தம் இந்தச் சிறியரில் ஒருவனுக்கு ஒரு கலசம் தண்ணீர்மாத்திரம் குடிக்கக் கொடுக்கிறவனும் தன் பலனை அடையாமற் போகான் என்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.***

***வசனம் 40.*** *இயேசு தமது அப்போஸ்தலர்களுக்கு,* ***உங்களை ஏற்றுக்கொள்ளுகிறவன் என்னை ஏற்றுக்கொள்ளுகிறான்*** *என்று தகவல் தெரிவித்தார். "ஏற்றுக்கொள்ளுதல்" என்பதன் அர்த்தம், 10:9-15 வசனப்பகுதியினால் தெளிவாக்கப்பட்டுள்ளது. தங்கள் இல்லங்களில் அப்போஸ்தலர்களை ஏற்றுக்கொண்டு அவர்களுக்கு உணவும் தங்குமிடமும் அளித்தவர்களை "ஏற்றுக்கொள்ளுபவர்கள்" என்று இவ்விடத்தில் இயேசு அர்த்தப்படுத்தினார். இன்றைய நாட்களில் கிறிஸ்தவர்கள், அப்போஸ்தலர்களைப் போன்று, அவருடைய நாமத்திலும் அவருடைய அதிகாரத்திலும் உலகம் முழுவதிலும் செல்கின்றனர் (28:18-20). சுவிசேஷச் செய்தியாளர் ஒருவரை "ஏற்றுக்கொள்ளுபவர்" செயல்விளைவில் இயேசுவையே ஏற்றுக்கொள்கிறார் (கலாத்தியர் 4:14). இதற்கு நேரெதிராக, இயேசுவின் சீஷர்களைத் துன்புறுத்துபவர் இயேசுவையே துன்புறுத்துகிறார் (நடபடிகள் 9:1-4). ரபீத்துவப் பாரம்பரியம் ஒன்று, "ஒரு மனிதரின் பிரதிநிதி அந்த மனிதராகவே கருதப்படுகிறார்" என்று உரைக்கிறது.*[15]

*இயேசு அவர்களுக்கு,* ***என்னை ஏற்றுக்கொள்ளுகிறவன் என்னை அனுப்பினவரை ஏற்றுக்கொள்ளுகிறான்*** *என்று நினைவூட்டினார். கிறிஸ்துவின் ஊழியத்தை ஆதரிப்பதன் மூலம் ஒருவர், அவரை அனுப்பிய பிதாவை கனப்படுத்துகிறார் (மாற்கு 9:37; லூக்கா 9:48; யோவான் 13:20).*

***வசனம் 41.*** *மேலும் இயேசு,* ***தீர்க்கதரிசி என்னும் நாமத்தினிமித்தம் தீர்க்கதரிசியை ஏற்றுக்கொள்ளுகிறவன் தீர்க்கதரிசிக்கேற்ற பலனை அடைவான்*** *என்ற தமது அறிவிப்பில் தீர்க்கதரிசிகளையும் உள்ளடக்கினார். "தீர்க்கதரிசி என்னும் நாமத்தினிமித்தம்" என்ற சொற்றொடர், " 'தீர்க்கதரிசி என்ற வகையில்' என்று அர்த்தப்படும் எபிரெயத்துவமாக" உள்ளது.*[16]

*வில்லியம் ஹென்றிக்சென் அவர்கள் 41அ வசனப்பகுதியை, "தீர்க்கதரிசி ஒருவரை அவர் தீர்க்கதரிசியாக இருக்கிறார் என்பதால் ஏற்றுக்கொள்கிறார்" என்று தரவழைத்தார்.*[17] தேவனுடைய செய்தியாளரை, வெகுமதியின் விருப்பத்திற்காக இன்றி, அவர் தேவனுடைய செய்தியாளராக இருக்கிறார் என்ற காரணத்தினால் மாத்திரம் ஏற்றுக்கொள்பவர், தாமே ஒரு தீர்க்கதரிசியாக இருப்பதற்குரிய பலனைப் பெற்றுக்கொள்வார். தொடக்ககால சபையில் தீர்க்கதரிசிகளும் தீர்க்கதரிசினிகளும் இருந்தனர் (நடபடிகள் 11:27-30; 13:1; 21:9-11; 1 கொரிந்தியர் 12:28; எபேசியர் 2:20; 3:5). தீர்க்கதரிசனம் என்பது தொடக்ககாலக் கிறிஸ்தவத்தில் முடிவடைந்த அற்புத வரங்களில் ஒன்றாக இருந்தது (காண்க 1 கொரிந்தியர் 13:8).

வசனம் 41ஆ, நீதிமானுக்கு காண்பிக்கப்படும் இதே வகையான உபசரிப்பு, சம அளவில் ஆசீர்வதிக்கப்படும் என்று சுட்டிக்காண்பிக்கிறது. (*Dikaios*) என்ற சொற்றொடர், நீதிமானாகவும் **நல்லவராகவும்** இருக்கும் ஒருவரை, தமது ஜீவனைத் தேவனுடைய பிரமாணங்களுக்கு ஏற்புடைய வகையில் காத்துக்கொள்ளும் ஒருவரைக் குறிக்கிறது. "தீர்க்கதரிசிகள்" மற்றும் "நீதிமான்கள்" ஆகியோர் மத்தேயு சுவிசேஷத்தின் வேறிடத்தில் ஒன்றாக வகைப்படுத்தப் பட்டுள்ளனர் (13:17; 23:29). இந்தச் சொற்றொடர்கள் ஒருபொருள் இணைகருத்தில் ஒன்றிற்குப் பதில் இன்னொன்றாகப் பயன்படுத்தப்பட முடியும். நீதிமான்கள் என்பவர்கள் (தீர்க்கதரிசிகளைப் போன்று) ஏவுதல் பெற்று இருக்கவில்லை என்பதால் அவர்கள் தீர்க்கதரிசிகளில் இருந்து வித்தியாசப்படுத்தப் பட்டுள்ளனர் என்பது இன்னொரு சாத்தியக்கூறாக உள்ளது. இவ்வசனத்தில் "நீதிமான்" என்பது தொடக்ககால சபையில் இருந்த "போதகரை" குறிக்கிறது என்ற சாத்தியக்கூறும் உள்ளது (காண்க 1 கொரிந்தியர் 12:29; எபேசியர் 4:11; யாக்கோபு 3:1).

**வசனம் 42. இந்தச் சிறியரில்** ஒருவனுக்கு என்ற சொற்றொடர் அப்போஸ்தலர்களைக் குறிக்கலாம் (காண்க மாற்கு 9:41) அல்லது இது இயேசுவைப் பின்பற்றுபவர்களைப் பொதுவாகக் குறிக்கலாம் (காண்க 18:6, 10, 14; மாற்கு 9:42; லூக்கா 17:2). இந்த விவரிப்பு அன்பினிமித்தமான சொற்றொடராக இருக்கலாம். இதே போன்ற "சிறு பிள்ளைகளே" என்ற சொல்விளக்கத்தை யோவான், தாம் யாருக்கு எழுதினாரோ அந்தக் கிறிஸ்தவர்களைக் குறிக்கப் பயன்படுத்தினார் (1 யோவான் 2:1, 28; 3:7, 18). இதற்கு மறுபுறத்தில், இது உலக தர அளவைகளின்படி, வலிமையற்றவர்களாகவும் அற்பமானவர்களைகவும் - "மிகவும் சிறியவராகிய என் சகோதரரான இவர்களில் ஒருவனுக்கு" (25:40; NIV) - இருப்பவர்களை வலியுறுத்தும் விவரிப்பாக இருக்கலாம்.

ஒரு **கலசம் தண்ணீர் மாத்திரம் குடிக்கக் கொடுத்தல்** என்ற, மிகச்சிறிய சேவையும்கூடக் கவனிக்கப்படும் (25:31-46). ஒரு நபர், சக விசுவாசிக்கு உணவையோ அல்லது தங்கும் இடத்தையோ அளிக்க இயலாதிருக்கலாம்; ஆனால் அவர் சிறிதளவே இரக்கம் காண்பித்தாலும், அவர் தன் **பலனை அடையாமற் போகார்.**

இயேசு தமது அப்போஸ்தலர்களுக்கு வரையறைக்குட்பட்ட கட்டளையைக் கொடுத்த பின்பு, அவர்கள் செய்யும்படி அவர் கேட்டுக்கொண்டதை நிறைவேற்ற அவர்கள் சென்றனர் (மாற்கு 6:12,

*13; லூக்கா 9:6). பிற்பாடு அவர்கள் திரும்பி வந்து, தங்கள் ஊழியத்தின் வெற்றியைப் பற்றி அவரிடத்தில் அறிக்கை சமர்ப்பித்தனர் (மாற்கு 6:30; லூக்கா 9:10).*

### ✧✧✧✧✧ பாடங்கள் ✧✧✧✧✧

## அப்போஸ்தலர்களின் மரணம் (10:28)

இயேசு தமது அப்போஸ்தலர்களுக்கு, "ஆத்துமாவைக் கொல்ல வல்லவர்களாயிராமல், சரீரத்தை மாத்திரம் கொல்லுகிறவர்களுக்கு நீங்கள் பயப்படவேண்டாம்" என்று கூறினார் (10:28). இந்த மனிதர்கள் அவரது வார்த்தையைத் தங்கள் இருதயத்தில் காத்துக்கொண்டனர்; முதிர் வயதானதால் மரித்த யோவானைத் தவிர,[18] மற்ற எல்லா அப்போஸ்தலர்களுமே வேதசாட்சிகளாக மரித்தனர் என்று பாரம்பரிய ஆதார மூலங்கள் உரிமை கோருகின்றன. அவர்கள் மரணமடைந்த இடம் மற்றும் விதம் பற்றி இந்த ஆதாரமூலங்கள் சிலவேளைகளில் கருத்து வேறுபடுகின்றன, ஆனால் அப்போஸ்தலர்களின் தைரியத்தையும் ஒப்புக்கொடுத்தலையும் பற்றிய மனப்பதிவை இவைகள் விட்டுச்செல்கின்றன. இந்த மனிதர்கள், கிறிஸ்துவைப் பற்றிய தங்கள் சாட்சியத்திற்காகக் கல்லெறியப்பட்டனர், தலைவெட்டப்பட்டனர் மற்றும் சிலுவையில் அறையப்பட்டனர். இந்த விவரிப்புகள், புதிய ஏற்பாட்டில் பதிவு செய்யப்பட்டுள்ள, ஸ்தேவான் கல்லெறியப்பட்டது மற்றும் யாக்கோபு பட்டயத்தினால் கொல்லப்பட்டு மரணம் அடைந்தது ஆகியவற்றுடன் சீர்பொருந்தி இருக்கின்றன (நடபடிகள் 7:58; 12:2).

டேவிட் ஸ்டூவர்ட்

## நல்ல அறிக்கை (10:32)

ஒரு கிறிஸ்தவர், தமது ஞானஸ்நானத்தின்போது செய்த நல்ல அறிக்கையைப் பராமரிக்க வேண்டும். இதை அவர் தாம் அன்றாடம் வாழும் வாழ்விலும் இயேசுவைப் பற்றிய தமது விசுவாசத்தைப் பகிர்ந்து கொள்ளுதலிலும் செய்கிறார். தீமோத்தேயுவிடம் பவுல், "விசுவாசத்தின் நல்ல போராட்டத்தைப் போராடு, நித்தியஜீவனைப் பற்றிக்கொள்; அதற்காகவே நீ அழைக்கப்பட்டாய்; அநேக சாட்சிகளுக்கு முன்பாக நல்ல அறிக்கை பண்ணினவனுமாயிருக்கிறாய்" என்று வேண்டிக் கேட்டுக்கொண்டார் (1 தீமோத்தேயு 6:12; NIV).

டேவிட் ஸ்டூவர்ட்

## உங்கள் ஜீவனைக் கண்டறிதல் (10:39)

"தன்னைத் தான் கண்டறிய" முயற்சி செய்கிற இளைஞனைப் பற்றிச் சிலவேளைகளில் நாம் பேசுகிறோம். மக்களில் பலர், விளையாட்டுகள், பொழுதுபோக்குகள், கல்வி மற்றும் வேலைகள் என்ற சட்டப்பூர்வமான செயல்பாடுகளின் மூலம் தங்களைப் கண்டறிய முயற்சி செய்கின்றனர். மற்றவர்கள், போதைப் பொருள்களைப் பயன்படுத்துதல் அல்லது பாலுறவு

ரீதியான மீறுதல்கள் ஆகியவற்றைப் பரிசோதித்தல் போன்ற சட்டவிரோதமான நாடுதல்களின் மூலம் தங்களைக் கண்டறிய முயற்சி செய்கின்றனர். முடிவில் இவைகளில் எவற்றினாலும் திருப்தி அடைய முடிவதில்லை. ஜீவனைக் கண்டறிய சாலொமோன், வேலை, செல்வம் மற்றும் பெண்கள் ஆகியவற்றை நாடினார் - மற்றும் வெறுமையை உணர்ந்தார். தேவனுடனான உறவில் மாத்திரமே ஜீவனின் அர்த்தத்தைக் காண முடியும் என்று அவர் முடிவு செய்தார் (பிரசங்கி 12:13, 14). இன்றைய நாட்களில் மக்கள் இயேசுவைப் பின்பற்றுவதினால் ஜீவனைக் கண்டடைய முடியும். இந்தப் பாதை வழியானது, சுயத்தை வெறுத்தல் மற்றும் தியாகம் ஆகியவற்றின் வழியாக உள்ளது, மற்றும் இது மாத்திரமே உண்மையிலேயே திருப்தி அளிக்கக் கூடிய வழியாக உள்ளது.

டேவிட் ஸ்டீவர்ட்

---

குறிப்புகள்

[1]Talmud *Berakoth* 58b. [2]Douglas R. A. Hare, *Matthew,* Interpretation (Louisville: John Knox Press, 1993), 115. [3]காண்க David E. Aune, "Beelzebul," in *The International Standard Bible Encyclopedia,* rev. ed., ed. Geoffrey W. Bromiley (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1979), 1:447-48; and Theodore J. Lewis, "Beelzebul," in *The Anchor Bible Dictionary,* ed. David Noel Freedman (New York: Doubleday, 1992), 1:638-70. [4]Talmud *Shabbath* 35b. [5]Walter Bauer, *A Greek-English Lexicon of the New Testament and Other Early Christian Literature,* 3d ed., rev. and ed. Frederick W. Danker (Chicago: University of Chicago Press, 2000), 1098-1100. [6]R. T. France, *The Gospel According to Matthew,* The Tyndale New Testament Commentaries (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1985), 186. [7]Robert H. Mounce, *Matthew,* New International Biblical Commentary (Peabody, Mass.: Hendrickson Publishers, 1991), 97. [8]Bauer, 145. ஒரு காசு (தோரனம்) என்பது ஒரு நாள் சம்பளம் ஆகும் (20:13). [9]David Menton, "The Amazing Human Hair," *Answers* (July/September 2007): 77. [10]Jerusalem Talmud *Shebiith* 9.1. "பரலோகத்தின் சித்தம் இல்லாமல்" என்பது தேவனுடைய சித்தத்தையும் அல்லது அவருடைய சர்வாதிகாரத்தையும் குறிக்கிறது.

[11]Pliny *Letters* 10.96. [12]Plutarch *Moralia* 554B. [13]David Hill, *The Gospel of Matthew,* The New Century Bible Commentary (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1972), 195. [14]James Burton Coffman, *Commentary on Matthew* (Austin, Tex.: Firm Foundation Publishing House, 1977), 146. [15]Mishnah *Berakoth* 5.5. [16]Jack P. Lewis, *The Gospel According to Matthew,* Part 1, The Living Word Commentary (Austin, Tex.: Sweet Publishing Co., 1976), 157; காண்க NEB. [17]William Hendriksen, *New Testament Commentary: Exposition of the Gospel According to Matthew* (Grand Rapids, Mich.: Baker Book House, 1973), 478; காண்க NIV. [18]காண்க William Byron Forbush, ed., *Fox's Book of Martyr*s (Philadelphia: Universal Book and Bible House, 1926), 2-5.